சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No.6/2016

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. சுரேஷ்த/பெ. | நாள்.03.09.2024 |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் வழக்கில் 1ம் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். 26.10.2006 தேதியில் 4ம் பிரதிவாதி பெயரில் 1 முதல் 3, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் ஏற்படுத்திய கிரய ஆவணத்தின் சார் பதிவு நகல் **வா.த.சா.ஆ.**1. மு.வ.65/2008 வழக்கில் நானும், மற்றவர்களும் தாக்கல் செய்த வழக்குரையின் நகல் **வா.த.சா.ஆ.2.** (மேற்கண்ட ஆவணம் ஒளிநகல் என்பதால் 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரதப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யபபட்டது. ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) 28.8.2015 தேதியில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நாங்கள் அனுப்பிய வழக்கு அறிவிப்பு நகல் **வா.த.சா.ஆ.3.** 4ம் பிரதிவாதி அனுப்பிய பதில் வழக்கு அறிவிப்பு **வா.த.சா.ஆ.4.** 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (எண்ணிக்கை 3) **வா.த.சா.ஆ.5.** தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)